**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 388/2023**
**வழக்கு சாட்சி PW-6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சசிகுமார் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | வேலு | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | வேம்பநல்லூர் | வயது | : | 44 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 23rd, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் வேம்பநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது ஊர்க்காரர்கள். 19.07.2022ம் தேதி, காலை 07.00 மணி முதல் 07.30 மணிக்குள் நானும், முருகையாவும் வேலைக்கு செல்வதற்காக கட்டளைக்குடியிருப்பிலிருந்து செங்கோட்டை நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தபோது, குடை தயாரிக்கும் கம்பெனிக்கு அருகில் செங்கோட்டை காவல்துறை அதிகாரிகள் எதிரிகள் சுகுமாரன், ராஜேந்திரன் ஆகியோர்களை கைது செய்து விசாரித்து கொண்டிருந்தார்கள். அப்போது, நாங்கள் அந்த வழியாக வரும்போது போலீசார் எங்களை எந்த ஊர் என்று கேட்டார்கள். நாங்கள் வேம்பநல்லூர் ஊரைச் சார்ந்தவர்கள் என்று சொன்னோம். அப்போது, எதிரிகளை காண்பித்து இவர்களை தெரியுமா? என்று கேட்டார்கள். நாங்கள் தெரியும் என்று சொன்னோம். அப்போது, ராஜேந்திரன் போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்தார். நான் அப்போது அங்கிருந்தேன். வாக்குமூலத்தில்

குத்துக்கல்வலசை ஒத்தபனையடியான் சாஸ்தா கோவிலுக்கு சென்றோம். வேம்பநல்லூர் முருகன் மகள் காது குத்துவதற்காக அங்கு சென்றிருந்ததாகவும், அங்கு சுடலைமுத்துவிற்கும், ராஜேந்திரனுக்கும் வாக்குவாதம் வந்து, தள்ளுமுள்ளு ஏற்பட்டதாகவும் சொன்னார். அதன் பிறகு 18.07.2022 ம் தேதி, நடந்த சம்பவத்தில் எதிரிகள் முத்துகிருஷ்ணன், சுகுமாரன் இருவரும் சுடலைமுத்துவை டாஸ்மார்க் கடைக்கு கூட்டிச்சென்று மது அருந்தும் போது, ராஜேந்திரன் சுடலைமுத்துவிற்கு போன் செய்து உயிருடன் விடமாட்டேன் என்று சொல்லிவிட்டு, போனை கட் பண்ணி விட்டதாக கூறினார். அதன் பிறகு சுகுமாரனும், முத்துகிருஷ்ணனும் தவணை விலக்கு பக்கம் சுடலைமுத்துவை தனியாக கூட்டிக்கொண்டு போய் சரக்கு அடிக்கும் போது, ராஜேந்திரன், மணிகண்டன் ஆகிய இருவரையும் கத்தி, அரிவாள் ஆகியவற்றை எடுத்து வரச்சொல்லி ராஜேந்திரன் எடுத்து வைத்திருந்த கத்தியை முத்துகிருஷ்ணன் பிடுங்கி சுடலைமுத்துவின் வலது கழுத்தில் வெட்டியதாக கூறினார். மணிகண்டன் அரிவாளை எடுத்து சுடலைமுத்துவின் இடது மணிக்கட்டில் வெட்டியதாக கூறினார். அவர் எழுந்திருக்க முயற்சி செய்யும் போது, சுகுமாரன் அவரை மிதித்து தள்ளி, உயிரோடு விடமாட்டேன் என்று கூறியதாகவும், கத்தியை முத்துகிருஷ்ணன் சுடலைமுத்துவின் வயிற்றில் குத்தும்போது சுடலைமுத்து கையில் தாங்கிக்கொண்டு அவர்களை தள்ளி விட்டு கட்டளைகுடியிருப்பை நோக்கி காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள் என்று ஓடி வரும்போது, எதிரே வந்த கிருஷ்ணசாமி, கருப்பசாமி, மகேஷ் ஆகிய 3 பேர்களையும் பார்த்தவுடன் எதிரிகள் சம்பவயிடத்திலேயே அவர்கள் வைத்திருந்த கத்தி, அரிவாள் ஆகியவற்றை போட்டு விட்டு எதிரிகள் முத்துகிருஷ்ணன், மணிகண்டன் ஆகியோர்கள் தலைமறைவாகி ஓடி

விட்டதாகவும் கூறினார். எதிரி ராஜேந்திரன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், முருகையா என்பவரும் கையெழுத்து செய்தோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள என்னுடைய கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.4 ஆகும். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.10.24 14:35:51 +0530